**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 169/2024 PW- 3**

Name : Vijayakumar
Father / Husband name : Munusamy
Village : Akoor
Age : 47
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.02.2026.

A1 present. A2 A3 absent. Petition u/s. 317 Crpc filed and allowed. APP present. Defence counsel present.

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தமிழ்மணி, மணிவண்ணன் எனது நண்பரா என்றால் ஆமாம். தமிழ்மணி எங்கு ஏர் ஓட்ட சென்றாலும் நான் செல்வேன் என்றால் இல்லை. எனக்கு டிராக்டர் ஓட்ட தெரியுமா என்றால் தெரியாது. நான் டிராக்டர் கிளினர் இல்லை என்றால் சரிதான். நான் எதற்காக அ.சா. 2 உடன் சென்றேன் என்றால் நான் அவருடன் செல்லவில்லை. அப்போது எங்கு இருந்தேன் என்றால் கழனியில் பூண்டு செடி பறிக்க கூப்பிட்டார்கள். கையால் எடுக்கும் அளவிற்கு காய்ந்து இருந்ததா என்றால் காய்ந்திருந்தது மண் வெட்டியால் எடுத்தோம். எத்தனை மணிக்கு சம்பவம் இடத்திற்கு சென்றோம் என்றால் காலை நேரத்தில் சென்று பகம் 12.00 வரை வேலை செய்தோம். போலிசார் எங்கு எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவத்தன்று மாலை சுமார் 04.30 மணியளவில் விசாரித்தார்கள். எந்த போலிசார் வந்து விசாரித்தார்கள் என்றால் பதவி தெரியாது. போலிசார் வந்த விவரத்தை யார் சொன்னது என்றால் அ.சா. 1 சொன்னார். போலிசார் விசாரித்த போது காலை 07.00 மணிக்கு பூண்டு செடி பறிக்க வந்ததாக சொன்னேனா என்றால் இல்லை. சம்பவ சமையத்தில் நான் பஞ்சாயத்து செய்யவில்லை என்றால் சரிதான். எந்த இடத்தில் வழி மறித்தார்கள் என்றால்

வழி பாதையில் மறித்தார்கள். எந்த வழி பாதை என்றால் தெரியாது. வழி பாதையில் எந்த இடத்தில் என்று குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை, கழனிக்கு செல்லும் வழி பாதை என்று சொன்னேன். யார் திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன், காந்திமதி என்று சொல்லியுள்ளேன். போலிசார் விசாரணையில் எதிரிகள் திட்டியதாக சொல்லியுள்ளேன் காந்திமதி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதன் பிறகு யார் வந்தார்கள் என்றால் காந்திமதி வழிமறித்த பிறகு 10 நிமிடம் கழித்து ராம்மையாவும், அவரது மகனும் வந்தார். போலிசார் விசாரணையில் எதிரிகள் மூவரும் வழிமறித்ததாக சொன்னேனா என்றால் இல்லை. ராம்மையாவிற்கும், அ.சா. 1 க்கும் இடையிலான பிரச்சனை பற்றி ஊரில் உள்ள அனைவருக்கும் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ சமையத்தில் அ.சா. 2 டிராக்டரில் அமர்ந்து சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நானும், அ.சா. 1ம் ஒரே ஊர்காரர்கள் என்றால் சரிதான். அ.சா. 1 அப்பாவிற்கும் ராம்மையாவிற்கும் சொத்து சம்மந்தமாக உரிமையியல் வழக்கு உள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கிற்காக அ.சா. 1 பொய் புகார் கொடுத்துள்ளார், எதிரிகள் யாரும் சம்பவயிடத்தில் இல்லை, மகனின் கல்லூரில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. முன் விரோத காரணத்தால் அ.சா. 1 பொய் புகார் கொடுத்துள்ளார் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 169/2024 PW- 1**

Name : Nithiyaprakash
Father / Husband name : Manivanan
Village : Akoor
Age : 36
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.02.2026.

A1 present. A2 A3 absent. Petition u/s. 317 Crpc filed and allowed. APP present. Defence counsel present.

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எந்த ஊரில் குடியிருக்கிறேன் என்றால் அகூரில் உள்ளேன். எனக்கு சொந்தமான நிலங்கள் எங்கு உள்ளது என்றால் தீவனூாரில் உள்ளது, எங்கள் ஊரில் இருந்து சுமார் $1^{1/2}$ கி.மீ. தூரத்தில் உள்ளது. எதிரிகளுக்கும் எனக்கும் என்ன முன்விரோதம் என்றால் எதுவும் இல்லை. புகாரில் முன்விரோதம் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். யார் யார் பெயரில் நிலம் உள்ளது என்றால் எனது தந்தையின் பெயரில் உள்ளது. வேறு யார் பெயரிலும் இல்லையா என்றால் இல்லை. வழிக்காக உள்ள நிலம் யார் பெயரில் உள்ளது என்றால் ஒரு நிலம் எனது தந்தை பெயரிலும், ராம்மையா பெயரிலும் கூட்டாக உள்ளது, மற்றொரு நிலம் மோகனகிருஷ்ணன், ராம்மையா பெயரிலும் உள்ளது. வழி பாதையை எனது தந்தை, ராம்மையா, மோகனகிருஷ்ணன் ஆகியோர் தவிர வேறு யாரும் பாதையை பயன்படுத்த கூடாது என ராம்மையா திண்டிவனம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

2. நிலம் பிரச்சனை சம்மந்தமாக இந்த வழக்கிற்கு முன்பாக புகார் எதாவது கொடுத்துள்ளேனா என்றால் ரோஷனை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து சி.எஸ்.ஆர். 406/2023 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த விசாரணைக்கு நாங்கள் இருவரும் சென்றோமா என்றால் சென்றோம். நிலம் யார் பெயரில் உள்ளதோ அவர்கள் மட்டும் பயன்படுத்த வேண்டும் என்று எழுதிகொடுத்தோம் என்றால் இல்லை, தந்தை பெயரில் உள்ள நிலத்தை மகன் பயன்படுத்தலாம் என்று சொல்லி ராம்மையா எழுதிகொடுத்தார். ராம்மையா எழுதி கொடுத்த ஆவணத்தை வாங்கி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை இறந்த பிறகு தான் சொத்து உரிமை எனக்கு வரும் அதனால் நான் பயன்படுத்தலாம் என்று ராம்மையா எழுதி கொடுத்தததாக சொன்னது பொய் என்றால் சரியல்ல. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்ததாக புகாரில் உள்ளது என்றால் காலை 11.30 மணி. புகாரில் எந்த இடத்தில் எதிரிகள் வழி மறித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் நிலத்தில் என சொல்லியுள்ளேன், குறிப்பிட்டு சொல்லவில்லை. அந்த நிலம் மணிவண்ணன், ராம்மையாவுக்கு சொந்தமான நிலமா அல்லது மணிவண்ணனுக்கு சொந்தமான நிலமா என்றால் மணிவண்ணனுக்கு மட்டும் சொந்தமான நிலம்.

3. புகாரை யார் எழுதியது என்றால் நான் சொல்ல எனது வழக்கறிஞர் முத்துகிருஷ்ணன் எழுதினார். புகார் எழுதி கொடுக்க முடியாத உடல் நிலையில் நான் இல்லை என்றால் சரிதான். ஏன் நான் எழுதவில்லை என்ற காரணத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். டிராக்டர் பதிவெண் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன்

என்றால் பகம் 12.00 மணிக்கு. புகார் பெற்றவுடன் சி.எஸ்.ஆர் கொடுத்தார்களா என்றால் இல்லை, மறுநாள் காலை 11.00 மணிக்கு கொடுத்தார்கள். என்னையும், ராம்மையாவையும் காவல் நிலையத்திற்கு வர சொன்னார்களா என்றால் இல்லை. புகாரில் "இன்றும் எதிரி ராம்மையா விசாரணைக்கு அழைத்தும் வரவில்லை " என உள்ளது என்றால் அவ்வாறு நாள் கொடுக்கவில்லை. இன்று அருகில் வரை என்பதை வேறு ஒரு நபர் எழுதியுள்ளார் என்றால் சரியல்ல. என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 08ம் தேதி மாலை விசாரித்தார்கள், அதன் பிறகு விசாரிக்கவில்லை. விஜயகுமார், தமிழ்மணி ஆகியோர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் அசூர். மணிவண்ணன், ராம்மையாவுக்கு சொந்தமான வழிபாதைக்கு அருகே ஜனநடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரியல்ல. டிராக்டர் எந்த

4. இடத்தில் வழிமறைத்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். யார் ஆபாச வார்த்தைகளால் திட்டி, அடித்தார்கள் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், மூன்று எதிரிகளும் திட்டி அடித்ததாக சொல்லியுள்ளேன். டிராக்டருக்கு முன்னால் எத்தனை துாரத்திற்கு முன்னால் படுத்தார்கள் என்றால் சுமார் 2 அடி துாரம். எங்களை தவிர வெளி நபர்கள் யார் சம்பவத்தை பார்த்தார்கள் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். புடவையின் எந்த பகுதியை கிழித்தார்கள் என்று குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தந்தை, மோகனகிருஷ்ணனை தவிர வேறு யாரையும் ராம்மைய்யா அனுமதிக்காமல் இருந்தார் என்றால் சரிதான். 3 வது எதிரி சம்பவத்தன்று அவரது கல்லூரியில் நடந்த வகுப்பில் இருந்தால்,

சம்பவயிடத்தில் இல்லை என்றால் சரியல்ல. 3 வது எதிரி BE பட்டதாரி என்றால் தெரியாது.வழிபாதையை பெறவதற்க்காக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் சம்மந்தமாக தீவனூர் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் வழக்கறிஞர் சம்பத்யிடம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவோம் என்று எதிரிகள் சொன்னதாக சொல்லியுள்ளேன், அப்போது எதிரிகள் அதற்குதேவையான உபகரனங்கள் வைத்திருந்ததாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆலோசனையின் படி எதிரிகள் மீது பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 169/2024 PW- 2**

Name : Tamilmani
Father / Husband name : Ramalingam
Village : Akoor
Age : 41
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.02.2026.

A1 present. A2 A3 absent. Petition u/s. 317 Crpc filed and allowed. APP present. Defence counsel present.

**<u>சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எப்போது எங்கு விசாரித்தார்கள் என்றால் காலை 11.30 மணியளவில் அ.சா. 1 கழனியில் வைத்து விசாரித்தார்கள். அந்த கழனி யாருக்கு சொந்தமானது அ.சா. 1 அல்லது அவரது அப்பாவா என்றால் அவரது அப்பாவிற்கு சொந்தமானது அ.சா. 1 பார்த்து வருகிறார். போலிசார் விசாரித்த போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் நாங்கள் மூன்று பேரும், எதிர் தரப்பில் மூன்று பேரும் இருந்தோம். அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்று தெரியுமா என்றால் தெரியாது. பொது பாதை நிலம் யாருக்கு சொந்தமானது என்று தெரியுமா என்றால் தெரியாது. சம்பவயிடம் யாருக்கு சொந்தமானது என்றால் தெரியாது. மணிவண்ணன் நிலத்திற்கும் பொது பாதை நிலத்திற்கு எவ்வளவு துாரம் என்றால் பக்கத்தில் உள்ளது. போலிசார் விசாரணையில் டிராக்டர் பதிவெண் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிகள் எந்த இடத்தில் மறித்தார்கள் என்று குறிப்பிட்டு வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான், வழிபாதை என்று சொல்லியுள்ளேன். வழிபாதை

என்று நான் சொல்லியதை போலிசார் எழுதிக்கொண்டார்களா என்றால் எழுதிக்கொண்டார்கள். எதிரிகளில் யார் என்னை திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் மூவரும் ஒருவருக்கு பின் ஒருவராக திட்டினார்கள்.

2. முதலில் யார் திட்டினார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. டிராக்டரை யார் மறித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, கழனி பாதையில் காந்திமதி வழிமறித்தார். எத்தனை அடி தூரத்தில் வழிமறித்தார் என்றால் சுமார் 1-2 அடி தூரத்தில் வழிமறித்தார். எங்கள் ஊர் தலைவரிடம் சொன்னோமா என்றால் சொன்னோம். தலைவர் என்ன நடவடிக்கை எடுத்தார் என்றால் தெரியாது. பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவோம் என்று சொல்லி அடிக்கவந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். முதலில் யார் மிரட்டினார் என்றால் ராம்மையா மிரட்டினார். அடுத்து யார் மிரட்டினார் என்றால் சுமார் 5 நிமிடம் கழித்து காந்திமதி, அதன் பின்னர் 5 நிமிடம் கழித்து அவரது மகன் மிரட்டினார். ராம்மையாவுக்கும், அ.சா. 1க்கும் ஏற்கனவே நிலம் பிரச்சனை உள்ளது என்று எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது நாங்கள் ஊர் தலைவருடன் சென்று எதிரிகளை மிரட்டினோம், அவர் வழி விடாததால் பொய் புகார் கொடுத்துள்ளோம்எ ன்றால் சரியல்ல. அ.சா. 1 ஊர்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.